மொரவெவ பிரதேச சபை - 2024

--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொரவெவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொரவெவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக

இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்த பயன்படுத்தியுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 முதல் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நன்கொடையாக கிடைக்கப்பெற்ற தொகை ரூபா 179,330 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது நன்கொடையாக கிடைக்கப்பெற்ற கிடைக்கப்பெற்றது உள்ளடக்கிக் கொள்வதற்கு தவறு விடப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் வருடத்திலேயே இறுதி கணக்கு தயாரிக்கப்படும் போது சீர் செய்து கொள்வதாக சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாக.	நன்கொடைகளை முறையாக பெற்றுக் கொண்டு அவற்றை குறிப்பிட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	நடப்பு வருடத்திலேயே பிரதேச அபிவிருத்தி உதவி செயல்திட்டத்தின் கீழ் நிர்மாண பணி செயற்கிட்டங்களுக்கு உரிய நிறைவு செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 27,303,708 ஆனவை மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை.	-மேற்படி-	மூலதனச் செலவுகள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

(இ)	பிரதேச அபிவிருத்தி உதவி செயல்திட்டத்திற்காக கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 22,273,540 கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ஆக காட்டப்பட்டிருக்கவில்லை	-மேற்படி-	-மேற்படி-

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2023 ஆம் வருடத்தின் நிதி கூற்றின் பிரகாரம் மீதிகள் நடப்பு ஆண்டின் ஆரம்ப மீதிகளாக கணக்குகளுக்கு கொண்டு வரும்போது ரூபா 14,000,000 இணக்கமின்மையொன்று காணப்பட்டது	உப பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 65,305,881 ஆக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	இணக்கமின்மையை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும்.

1.6.3 தொங்கள் கணக்கு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2011 ஆம் வருடத்தில் இருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 7,864,759 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதியை அடையாளம் கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் ஐந்தொகையின் திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	2011 ஆம் இறுதி கணக்கில் இந்த மீதி முதல் தடவையாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து இன்று வரை அனைத்து இறுதி கணக்குகளிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு உரிய தகவல்கள் இல்லாமையின் காரணமாக இதை தீர்ப்பு செய்வதற்கு முடியாது உள்ளது. துரிதமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	தொங்கல் கணக்கு மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுகளில் காட்டப் பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 133,366,378 ஆன 04 கணக்கீட்டு விடயங்களுக்காக காணி அனுமதிப் பத்திர உறுதி, அளவைத் திட்டம், நிலையான சொத்துக்கள் பதிவேடு, இருப்பு கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது.	ஒரு சில சொத்துக்களின் ஆரம்ப கிரயம் அல்லது ஆரம்ப பெறுமதியை தெளிவாக அடையாளம் காணக்கூடிய தகவல்கள் இல்லாமல் காணப்பட்டதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. தற்போது தகவல்கள் திரட்டப்பட்டு வருவதோடு துரிதமாக குறித்த ஆவணங்களை இற்றைப் படித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக	கணக்கு மீதிகளை சான்றுறுதிப் படுத்தக்கூடிய சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்			
(i)	24 ஆந் பிரிவு	சபைக்கு சொந்தமான அனைத்து பாதைகளையும் இனங்கண்டு இன்வென்ட்றியில் உட்படுத்த மற்றும் வர்த்தமானியில் பிரசுரிக்கவும்	பாதைகள் இன்வென்ட்ரி இற்றைப்படுத்தப் பட்டுள்ளதுடன் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகள் இற்றைப்படுத்தப்படாத துடன் இவற்றின்தகவல்கள்	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		நடவடிக்கைத்திருக்க வில்லை.	கிராம உத்தியோகத்தர்கள் மட்டத்தில் வர்த்தமானியில் பிர சுரிப்பதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	
(ii)	134 ஆந் பிரிவு	சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள முன்னேறிய பிரதேசங்கள் காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முன்னேற்றிய பிரதேசங்கள் இனங்கணப்பட்டுள்ளன. அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்து வீதவரி அறவிட திட்டமிட்டுள்ளதென.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவக்கை எடுக்க வேண்டும்.
(iii)	159 பிரிவு	மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 3,297,883 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவை வருமானங்களின் ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை அறிவிட தேவையான சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளத ாக.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை.			
(i)	139(8) நிதிப் பிரமாணம்	இரண்டு சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப் பட்ட ரூபா 635,160 ஆன பெறுமதி கொள்வனவு செய்யப்பட்டவை இருப்பு புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் தவறின் காரணமாக அவ்வாறு நிகழ்ந்துள்ளது. இதற்குப் பிறகு அவ்வாறு நிகழாமல் இருப்பதற்கு பார்த்துக் கொள்வதாக.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii)	1645 நிதிப் பிரமாணம்	ஒவ்வொரு மாதமும் நிறைவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் நாளாந்த ஓட்ட குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்கு சொந்தமான 12 வாகனங்களில் 05 மாத்திரம் ஆரம்ப ஆறு மாதங்களுக்காக ஓட்ட குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் தவறின் காரணமாக அவ்வாறு நிகழ்ந்துள்ளது. இதற்குப் பிறகு அவ்வாறு நிகழாமல் இருப்பதற்கு பார்த்துக் கொள்வதாக.	நிதிப்பிரமாணம் பிரகாரம் சபைக்கு உரித்தான அனைத்து வாகனங்களினதும் ஓட்ட குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(iii)	1646 நிதிப் பிரமாணம்	சபையினால் வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 282,103 பெறுமதியான திருத்த வேலைகள் செய்தல், சர்வீஸ் செய்தல், உதிரி பாகங்கள் கொள்வனவு செய்தல் போன்றவை லொக் குறிப்பு பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	-மேற்படி-	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2018 இன் 19 ஆந் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு	கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சமர்ப்பித்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் அவற்றை முறையாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக.	தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை	சுற்று நிருபத்தின் பிரகாரம மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு	செயலாற்றல் ஒப்பந்தங்களுக்கு உட்படுத்தப்பட்டது. மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		இருக்கவில்லை. மேலும் நடப்பு வருடத்துக்காக செயலாற்றல் ஒப்பந்தங்களுக்கு முற்பட்டிருக்கவில்லை.	தயாரிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	
(உ)	30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1	சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு உரித்தான 10 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நெறிவு பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்வரும் வருடத்தினுள் அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் பரிசீலனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை	ஒவ்வொரு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த திகதிக்கு முன்னர் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக்.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,820,596 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 176,105 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

வருமான மூலம்	2024 மதிப்பிடப்பட்ட வருமானம்	பில் போடப்பட்ட வருமானம்	சேர்க்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	2023 மதிப்பிடப்பட்ட வருமானம	பில் போடப்பட்ட வருமானம	சேர்க்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வாடகை	6,400	5,532	5,329	698	6,200	3,862	3,836	495
அனுமதிப்பத் திரக் கட்டணம்	375	174	174	-	425	243	244	-
ஏனைய வருமானம்	3,100	1,796	1,796	364	-	1,366	1,002	364
மொத்தம்	9,875	7,502	7,299	1,062	6,625	5,471	5,082	859

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவையாக நிலவிய வாகன வாடகை ரூபா 416,240 ஆனதுடன் அவற்றில் ரூபா 188,730 ஆன வாகன வாடகை பல ஆண்டுகளாக நிலவிவரும் நிலுவை ஒன்றாக அவதானிக்கப்பட்டது.	நிலுவை வாடகை வருமானத்திலிருந்து ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென.	முறையாக நிலுவை வருமானத்தை அறவிட நடவக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் பிரகாரம் 28 பிரதாக விடயங்களுக்காக துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த	துணை சட்ட வரைவுகள் சில உள்ளூராட்சி ஆணையாளரின் அலுவலகத்தின் ஊடாக	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரை துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்காத துடன், மாகான சபையினால் அடையாளப்படுத்தப்பட்ட 05 துணை விதிகளை மாத்திரம் அங்கீகரிக்கபட்டிருந்தது.	கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.-	

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபையின் பணிகளுக்கு இடையில் பிரதான பணி ஒன்றாக அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வருமான பரிசோதக உத்தியோகத்தர் ஒருவர் இல்லாததன் காரணமாக காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் கடினமாக காணப்படுவதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதி பத்திரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	காணி அபிவிருத்தி நடவடிக்கைகள ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய கடன் அபிவிருத்தி திணைக்களத்திடம் பெற்றுக் கொண்ட கடன் தொகையை முறையாக செலுத்தாமையின் காரணமாக நடப்பாண்டின் போதும் ரூபா 3,125,000 காலாவதியான பணம் மீதி ஒன்றை செலுத்துவதற்கு காணப்பட்டது.	2024 நவம்பர் மாதத்தில் இருந்து நிலுவை கடன் தவணை மீண்டும் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2024 நவம்பர் மாதத்தில் இருந்து மாதாந்தம் கடன் தவணை செலுத்தப்பட்டு வருவதாக.	சிறப்பான நிதி முகாமைத்துவத்தை பேணிக் கொள்ள வேண்டும்.
(ஆ)	2017 ஆண்டில் ரூபா 1,826,485 முற்பாணமாக பெற்றிருந்ததுடன் அந்த முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த முற்பணங்கள் சபையின் கீழ் காணப்படுகின்ற சன சமூக சபைக்கு ஒப்பந்த முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் இறுதி சிட்டைக்காக கொடுப்பனவுகளை	முற்பணம் தொடர்பாக சிறப்பான கட்டுப்பாட்டை பேணிக் கொள்ள வேண்டும்.

	மேற்கொள்ளும் போது குறித்த முற்பணத் தொகைகளை அறவிட்டிருந்த போதிலும் அவை இறுதி கணக்குகளில் சீர் செய்யப்படாமையினால் இந்த பணத்தை தீர்க்கப்படாத முற்பணமாக காட்டப்பட்டதாக.	

3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2015 ஆண்டில் ரூபா 16,695,000 கிரயமான JCB இயந்திரம் தற்போது 05 வருட அளவு காலமாக செயற்படாது காணப்பட்டது.	குறித்த வாகனத்தை திருத்துவதற்கு பாரிய நிதி செலவாவதால் சபைக்கு அவ்வாறான பாரிய நிதிஇல்லாததால் இந்த நிலைமை காணப்படுவதெென.	சொத்தக்கள் முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும்.
(ஆ)	இலக்கம் 02/2017 கொண்ட 2017 திசெம்பர் 21 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ கருத்திட்டம் மூலம் கிடைத்த 02 வாகனங்கள் மற்றும் 02 டேலர்களை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சபைக்கு உரித்தான வாகனங்களில் 02 வாகனம் மாத்திரம் இதுவரை சபைக்கு சுவிகரிக்கப்படாததுடன் ஏனைய அனைத்து வாகனங்களும் சபைக்கு சுவிகரிக்கப்பட்டுள்ளதாக.	சொத்துக்களை சபையின் பெயருக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2021 ஆம் வருடத்தினுள் ரூபா 485,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கம்போஸ்ட் மூலப்பொருள் அரைக்கும் இயந்திரம் மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக செயல்பாடு இழந்து காணப்பட்டது. இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளாததன் காரணமாக இந்த இயந்திரம் விளைவற்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.	சபையின் தேவையை கருத்தில் கொள்ளாமல் அப்போது காணப்பட்ட அரசின் தேவை அடிப்படையில் கம்போஸ்ட் அரைக்கும் இயந்திரம் அவசியம் பட்டு கொள்வனவு செய்யப்பட்டவுடன் அதனால் இயந்திரத்துக்கு தேவையான அளவு மூலப்பொருட்கள் கிடைக்காமையின் காரணமாக இயந்திரம் ஒழுங்கற்ற நிலையில் காணப்பட்டது என்பதாக.	சொத்தக்கள் முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும்.

3.5 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2016 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு செயல் திட்டங்களுக்கு உரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 435,625 ஆன தாமதக் கட்டணம் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	இந்த சம்பவம் பல வருடங்களுக்கு முன்னரான சம்பவம் ஒன்றாக காணப்படுவதுடன் அப்போது சேவையில் இருந்த உத்தியோகத்தர்கள் தற்போது இந்த காரியாலயத்தில் காணப்படவில்லை. அதனால் குறித்த காலத்தில் இருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் இது தொடர்பாக கேட்டறிந்த போது குறித்த செயல் திட்ட பொறுப்பான பொறியியலாளரின் பரிந்துரைத்த பிரமாணத்துக்கு மாத்திரம் தாமதம் கட்டணம் அறவிடப்பட்டதாகவும் பொறியியலாளரின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு குறிப்புகளும் அல்லது கடிதமும் கோப்புக்குள் காணப்படவில்லை. அதனால் தாமதக் கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதில் நடைமுறைப் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக.	கொடுப்பனவுகள் மற்றும் அறவீடுகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.6 ஏனைய அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வழங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(XII) ஆம் பிரிவின் பிரகாரம், சபைக்கு உரித்தான காணியில் அல்லது கட்டிடத்தில் ஒரு பகுதியை 03 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட கால குத்தகை அடிப்படையில்	குறித்த கம்பெனியுடன் சோலா பவர் சிஸ்டம் நிறுவுதல் தொடர்பாக 20 வருட கால ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் வழங்கி	வருமானங்களை ஈட்டிக் கொள்ளக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு சட்ட அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை

வழங்கப்படும் போது, உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரிடம் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும் 20 வருடங்களை அதிகமான நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் இன்றி சபையின் கட்டிடத்தின் கூரையில் சூரிய மின்சக்தி பொருத்துவதற்கு சினோ லங்கா பவர் ஜெனரல் தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்தது.	உள்ளதாக அறிவிக்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுமாறு உள்ளூராட்சி ஆணையாளரினால் எழுத்து மூலமாக அறிவுரைகள் பெற்றுத் தந்திருந்த உடன் அந்த அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.7 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை கவனிக்கும் போது 06 பதவிகளில் 09 வெற்றிடங்கள் காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 02 பதவிகளில் அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கையை விஞ்சி மிகையான 03 ஊழியர்கள் காணப்பட்டனர்.	குறித்த வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளும் அதிக தேவைப்பாடு காணப்பட்ட போதும் புதிய நியமனங்களை வழங்காத அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அவ் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள முடியாதுள்ளதென.	தேவையின் முக்கியத்துவத்தை தெரியப்படுத்தி வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 11 அலுவலர்களினால் போதிய வாறு பிணை வைத்திருக்க வில்லை.	இந்த வருடத்திற்குள் குறித்த உத்தியோகத்தர்கள் அனைவராலும பிணை வைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பல வருடங்களிற்கு முன்னர் 05 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 335,396	உரிய கடனாளிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. நிலுவையில் உள்ள	நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம்

ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கடன்களை உடனடியாக அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதென.	நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 செயல் நடவடிக்கை திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
பிரதேச சபையினால் 2024 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன் மீளாய்வாண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டுகளிலிருந்து செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென.	வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டும்.

4.2 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
உள்ளக கணக்காய்வுகள் செயற்படுத்தப்பட்டிருந்த போதும் அப் பிரிவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஒழுங்குபடுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல் மாத்திரம் மேற்கொள்வதுடன் முறையான கணக்காய்வு நிகழ்சித் திட்டத்தின் பிரகாரம் செயல்படுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரித்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது சரியாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	அவதானிப்பின் போது குறிப்பிடப்பட்டுள்ள வடயங்கள் சீர் செய்யப்பட்டு உள்ளக கணக்காய்வு முறைமையாக்கப்பட வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடுகையில் 05 வருமான விடயங்களில் 9 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையும் 04 செலவு விடயங்களில் 02 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.	திட்டமிட்டதன் பிரகாரம் வருமானங்கள் கிடைக்கப் பெறாமையினால் இந்த நிலைமை நேர்ந்திருந்தது. வருமானங்கள் குறைந்ததன் காரணமாக செலவுகளை வரையறுப்பதற்கு நேர்ந்திருந்ததாக.	வரவு செலவுத் திட்டத்தை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும்.

4.4 நிலைபேறான அபிபிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குககள் மற்றும் குறித்த பிரமாணங்களை இனங்காண்பது தொடர்பாக போதிய தெளிவொன்றை மீளாய்வாண்டிலும் பெற்றுக் கொண்டிருக்காத போதும் இரண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குளை மாத்திரம் செயற்படுத்தி இருந்தன.	நிலைபேறான அபிபிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் தொடர்புடைய அளவுகோல்களை அடையாளம் காண்பது குறித்து உத்தியோகத்தர்களிடையே சரியான புரிதல் இல்லாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை அடைந்து கொள்ள வேண்டும்.